தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

04.11.2012 P.M

05.11.2012 A.M

## கேரளத்தில் தடை நீடிப்பு : 6 கோடி முட்டைகள் தேக்கம் ; ரூ.2-க்கு விற்பனை ?

பறவைக் காய்ச்சல் பீதியால் கேரளத்தில் விதிக்கப்பட்ட தடை தொடர்ந்து நீடிப்பதால் நாமக்கல் மண்டல கோழிப்பண்ணைகளில் மொத்தம் சுமார் 6 கோடி முட்டைகள் தேக்கமடைந்துள்ளன.

இதனால், முட்டைகளை பண்ணையாளர்கள் மறைமுகமாக ரூ.2-க்கு விற்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பெங்களூரில் ஏற்பட்டுள்ள பறவைக் காய்ச்சல் பீதியை அடுத்து, கேரளத்தில் வெளி மாநில கோழி இறைச்சி, முட்டைகளுக்கு விதிக்கப்பட்ட தடை 7-வது நாளாக ஞாயிற்றுக்கிழமையும் நீடித்தது. இதைத் தொடர்ந்து, தமிழக கோழி முட்டை லாரிகள் கேரளத்துக்குள் அனுமதிக்கப்படாமல் மீண்டும் தமிழகத்துக்கே திரும்பி வருகின்றன.

இதற்கிடையே, இந்தியக் கோழி முட்டைகள், இறைச்சிகளுக்கு ஓமன் நாட்டிலும் தடை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, நாமக்கல் மண்டல கோழிப் பண்ணைகளில் இதுவரை 6 கோடிக்கும் அதிகமான முட்டைகள் தேங்கியுள்ளன.

இதையடுத்து, நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு சனிக்கிழமை ஒரே நாளில் முட்டைக் கொள்முதல் விலையை 15 காசுகள் குறைத்து ரூ.3ஆக நிர்ணயம் செய்தது.

ஆனால், பண்ணைகளில் அதிகப்படியாக தேங்கியுள்ள முட்டைகளை உடனடியாக விற்றாக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதால், பண்ணையாளர்கள் முட்டைகளை மறைமுகமாக ரூ.2 முதல் ரூ.2.50 வரை விற்று வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன் காரணமாக, முட்டை உற்பத்தியாளர்களுக்கு தினசரி ரூ.2 கோடி இழப்பு ஏற்பட்டு வருவதாக என்இசிசி நாமக்கல் மண்டலத் தலைவர் செல்வராஜ் தெரிவித்தார்.

கறிக்கோழி விலை வீழ்ச்சி: இதேபோல, கடந்த 6 நாள்களாக கறிக்கோழியும் கேரளத்துக்கு கொண்டு செல்லப்படாததால் அதன் விலையும் கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது. நாமக்கல் பகுதியில் கடந்த வாரம் ரூ.120-க்கு விற்கப்பட்ட ஒரு கிலோ கறிக்கோழி தற்போது ரூ.60 முதல் ரூ.70-க்கு விற்கப்படுகிறது.

மத்திய அரசுக்குக் கோரிக்கை: இந்த நிலையில், இந்திய கோழி முட்டைகளுக்கு ஓமன் நாட்டில் மீண்டும் ஏற்றுமதி வாய்ப்பை ஏற்படுத்தித் தர மத்திய அரசு விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கால்நடை மற்றும் விவசாயப் பொருள்கள் வர்த்தகர்கள் சங்கம் (எல்ஜஎஃப்டி) வலியுறுத்தியுள்ளது.

**காவிரி பிரச்னை : மேக விதைப்பு , செயற்கை மழை தீர்வாகுமா ?**



தமிழக, கர்நாடக மாநிலங்களுக்கு இடையிலான காவிரி பிரச்னையை மேக விதைப்பு அல்லது செயற்கை மழை மூலம் தீர்க்க இயலும் என பலரும் தெரிவிக்கின்றனர்.

ஜூன் முதல் செப்டம்பர் மாதம் வரை தென்மேற்கு பருவமழை கர்நாடகத்தில் பொழியும் போது, காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளிலும் பலத்த மழை பெய்வது வழக்கம். கர்நாடகத்தின் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் சராசரியாக ஆண்டுக்கு 574 மி.மீ. முதல் 3,345 மி.மீ. வரை மழை பெய்கிறது. பல நேரங்களில் மழை பொய்த்துவிடுவதால், காவிரிக்கு குறுக்கே கட்டப்பட்டுள்ள கிருஷ்ணராஜசாகர், கபினி, ஹாரங்கி, ஹேமாவதி ஆகிய அணைகளில் போதுமான நீர் இருப்பு இருப்பதில்லை. இதனால், தமிழகத்துக்கு தண்ணீர் வழங்க முடியாத நிலை ஏற்படுகிறது. இது காவிரி பிரச்னைக்கு வித்திடுகிறது.

இந்தப் பிரச்னையைத் தீர்க்க என்ன செய்யலாம் என்று கேட்ட போது கர்நாடக முன்னாள் நீர்ப்பாசனத் துறை அமைச்சர் எச்.கே.பாட்டீல் கூறியது:

காவிரி நதிப் படுகைப் பகுதிகளின் நீர்ப் பாசனம், குடிநீர்த் தேவைக்கு காவிரியை நம்பியிருக்க வேண்டியுள்ளது. கர்நாடகத்தில் வறட்சி ஏற்பட்டால், காவிரி பிரச்னை துளிர்த்துவிடுகிறது. எனவே, காவிரி பிரச்னைக்கு தீர்வு காண செயற்கை மழை அல்லது மேக விதைப்பு முறையை நிரந்தரமாகக் கையாள்வது, பிரச்னையின் தீவிரத்தை ஓரளவு தணிக்கும். ஆனால், அதுவே நிரந்தரத் தீர்வாக அமையாது. இந்தத் திட்டத்தை காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் செயல்படுத்த ஆண்டுக்கு ரூ.5 கோடி முதல் ரூ.8 கோடி செலவாகும்.

ஆண்டுதோறும் தென்மேற்கு பருவமழையின் போது மேக விதைப்பை செயல்படுத்தினால் 20 சதம் கூடுதல் மழை கிடைக்கும். வறட்சிக் காலத்தில் மட்டுமல்லாது, ஆண்டு தோறும் மேக விதைப்பைச் செயல்படுத்தினால் காவிரி பிரச்னைக்கு ஓரளவு தீர்வு கிடைக்கும் என்றார் அவர்.

10 ஆண்டுகளாக மேக விதைப்புத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் அக்னி ஏரோ ஸ்போர்ட்ஸ் அட்வென்சர் அகாதெமி தலைமைச் செயல் அதிகாரி அரவிந்த் சர்மா கூறியது:

தண்ணீர் தேவையை நிறைவு செய்து கொள்வதற்காக கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக சீனா செயற்கை மழை அல்லது மேக விதைப்பு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வருகிறது. ஐரோப்பிய நாடுகள் உள்பட உலக அளவில் 24 நாடுகள் மேக விதைப்பு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறார்கள்.

1946-ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட இந்தத் தொழில்நுட்பம் மழை நீரைப் பெருக்க உதவுகிறது. மேகங்கள் இருந்தால், அதிலிருந்து கூடுதலாக 20 சத நீரைப் பெற மேக விதைப்பு தொழில்நுட்பம் உதவியாக இருக்கும். இந்தியாவில் கர்நாடகம், ராஜஸ்தான், மகாராஷ்டிரம், ஆந்திர மாநிலங்களில் மேக விதைப்பு தொழில்நுட்பம் சிறந்த பலனை அளித்துள்ளது. ஒரு விமானம் ஒரு மாதம் மேக விதைப்புப் பணியில் ஈடுபட ரூ.5 கோடி செலவாகும். மழைநீரைப் பெருக்கி, காவிரி பிரச்னைக்குத் தீர்வு காண ஆண்டு தோறும் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மேக விதைப்பு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தலாம் என்றார் அவர்.

4th nov 2012 P.M

**புயலால் காய்கறிகள் விலை உயர்வு**

புயல் காரணமாக வெளிமாநிலங்களிலிருந்து காய்கறிகள் வரத்து குறைந்ததால் அவரை, பீன்ஸ், தக்காளி போன்ற காய்கறி வகைகளின் விலை உயர்ந்துள்ளது.

கோயம்பேடு மார்க்கெட்டுக்கு கர்நாடகம், கேரளம், ஆந்திரம் மற்றும் தமிழகத்தின் பிற பகுதிகளிலிருந்து சென்னை, கோயம்பேடுக்கு காய்கறி, பழங்கள் கொண்டுவரப்படுகின்றன.

ஏற்கெனவே டீசல் விலை உயர்வால் போக்குவரத்து வாடகை உயர்வு ஏற்பட்டு அனைத்து காய்கறிகளின் விலைகளும் உயர்ந்துள்ளன.

இந்நிலையில் தொடர் மழை காரணமாக ஆந்திரம் மற்றும் கர்நாடகத்திலிருந்து வரும் வெங்காயம், அவரை, பீன்ஸ், பீட்ரூட், "நவீன்' தக்காளி ஆகியவற்றின் வரத்து குறைந்துள்ளது. இதனால் வெளி மாநிலங்களிலிருந்து வரும் காய்கறிகளின் விலை அதிகரித்துள்ளது.

சனிக்கிழமை நிலவரப்படி கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறிகளின் விலை நிலவரம் (ஒரு கிலோவுக்கு):

அவரை ரூ.40, பீன்ஸ் ரூ.50, வெண்டை ரூ.20, புடலங்காய் ரூ.20, பாகற்காய் ரூ.15, நூக்கல் ரூ.15, கேரட் ரூ.40, உருளை ரூ.30, பீட்ரூட் ரூ.15, ப.மிளகாய் ரூ.15, இஞ்சி ரூ.60, கத்திரி ரூ.15, முள்ளங்கி ரூ.20, சின்ன வெங்காயம் ரூ.40, பெரிய வெங்காயம் ரூ.20, நாட்டுத் தக்காளி ரூ.10, நவீன் தக்காளி ரூ.20, கோஸ் ரூ.20, கருணைகிழங்கு ரூ.30, முருங்கை ரூ.40 மற்றும் காளிபிளவர்

## சம்பா சிறப்பு தொகுப்புத் திட்டம் விவசாயிகளைச் சென்றடையவில்லை

தமிழக அரசின் சம்பா சிறப்பு தொகுப்புத் திட்டத்தின் பயன்கள் விவசாயிகளைச் சென்றடையவில்லை என விவசாயிகள் புகார் தெரிவித்துள்ளனர்.

÷இது குறித்து கொள்ளிடம் கீழமை பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் பி.விநாயகமூர்த்தி முதல்வருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:

÷கர்நாடக அரசு தமிழகத்திற்கு தேவையான தண்ணீரை வழங்காததால் இந்த ஆண்டு மேட்டூர் அணையில் இருந்து பாசனத்திற்கு காலதாமதமாக நீர் திறந்துவிடப்பட்டது. இதைக் கருத்தில் கொண்டு காவிரி டெல்டா விவசாயிகள் சம்பா சிறப்பு தொகுப்புத் திட்டத்தை முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார்.

÷இதில் போர்வெல் மூலம் ஒரே இடத்தில் நாற்று விட்டு தண்ணீர் வந்தவுடன் பறித்து நடவு செய்தல், உழவு மானியம், ஸிங்க் சல்பேட், ஜிப்சம் போன்ற இடுபொருள்களுக்கு மானியம் உள்ளிட்ட 8 அம்ச திட்டங்கள் அறிவிக்கப்பட்டது. இத்திட்டம் குறித்து விவசாயிகளுக்கு முழுமையாகத் தெரியவில்லை.

÷கடலூர் மாவட்ட விவசாயிகளுக்கு இத்திட்டத்தின் கீழ் 40 விழுக்காடு மானியம் கிடைத்துள்ளது. டெல்டா விவசாயிகளை பாதிப்பில் இருந்து மீட்க முதல்வர் அறிவித்த திட்டத்தின் நோக்கத்தை

வேளாண்துறை சரிவர நடைமுறைப்படுத்தாததால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

÷எனவே சிறப்பு தொகுப்புத் திட்டத்தின் பயன்கள் விவசாயிகளுக்கு முழுமையாக சென்றடைய முதல்வர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**உழவர் பாதுகாப்புத் திட்டம் குறித்த ஆலோசனைக் கூட்டம்**

தமிழக முதல்வரின் உழவர் பாதுகாப்புத்திட்டம் குறித்து காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள ஊராட்சி மன்றத் தலைவர்களுடனான ஆலோசனைக் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

தமிழக முதல்வரின் உழவர் பாதுகாப்புத்திட்டத்தில் புதிய உறுப்பினர்கள் சேர்க்கை குறித்த முகாம் வரும் நவம்பர் 5-ம் தேதி முதல் நவம்பர் 9-ம் தேதி வரை நடைபெறுகிறது.

இத்திட்டத்தில் ஆண்டு வருமானம் ரூ. 72 ஆயிரத்துக்கும் குறைவாக உடைய விவசாயக் குடும்பத்தினர் சேரலாம்.

அந்தந்த கிராம நிர்வாக அலுவலகம் அல்லது வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள சமூக பாதுகாப்புத்திட்ட தனி வட்டாட்சியர்களிடம் மனு செய்து இத்திட்டத்தில் உறுப்பினர்களாகலாம்.

இதன் மூலம் கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, விபத்து நிவாரணம், முதியோர் உதவித் தொகை, இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு நிவாரணம் ஆகிய பயன்பாடுகள் கிடைக்கும்.

எனவே நடைபெற உள்ள முகாமை பயன்படுத்திக் கொண்டு 100 சதவீதம் உறுப்பினர்களை சேர்ப்பது குறித்து ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்துக்கு தலைமை வகித்து மாவட்ட ஆட்சியர் லி. சித்ரசேனன் பேசியதாவது:

உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் சேர்ந்தவர்களுக்கு பெண்ணின் திருமண உதவித்தொகையாக ரூ. 10 ஆயிரமும், ஆண்களுக்கான திருமண உதவித்தொகையாக ரூ. 8 ஆயிரமும் வழங்கப்படும்.

பட்டம் மற்றும் பட்டயக் கல்விகளை விடுதியில் தங்கிப் படிக்கும் மற்றும் விடுதியில் தங்காமல் படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 2,250 முதல் ரூ. 6,750 வரை கல்வி உதவித் தொகையாக வழங்கப்படும்.

வேறு துறையில் கல்வி உதவித் தொகை பெற்றிருந்தாலும் இந்த உதவித் தொகை வழங்கப்படும்.

குடும்பத் தலைவர் அல்லது தலைவி விபத்தில் இறந்தால் அக்குடும்பத்துக்கு ரூ. 1 லட்சம் நிவாரணமாக வழங்கப்படும்.

இயற்கை மரணத்துக்கு உதவித்தொகையாக ரூ. 10 ஆயிரம் வழங்கப்படும். ஈமச்சடங்கு செலவுக்கு ரூ. 2,500 உதவித் தொகை உடனடியாக வழங்கப்படும்.

உறுப்பினர்களுக்கு காசநோய், புற்றுநோய், எய்ட்ஸ் உள்ளிட்ட நோய்கள் இருந்தால் மாதந்தோறும் ரூ. 1000 உதவித் தொகையாக வழங்கப்படும்.

இவ்வாறாக உழவர் பாதுகாப்புத்திட்டத்தில் பல்வேறு சலுகைகள் உள்ளன என்றார் அவர்.

இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் மாவட்ட திட்ட அலுவலர் அருள்ஜோதி அரசன், காஞ்சிபுரம் மாவட்ட சுகாதாரப் பணிகள் இணை இயக்குனர் கிருஷ்ணராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## செல்லம்பட்டி பகுதியில் விவசாய மாதிரி கிராமம் :அமைச்சர் ஆய்வு

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி அருகே செல்லம்பட்டி பகுதியில் விவசாய மாதிரி கிராமத்தை அமைச்சர் ஆய்வு செய்தார்.

செல்லம்பட்டி பகுதியில் கண்ணனூர் கிராமத்தை மாதிரி கிராமமாகத் தேர்வு செய்து, தோட்டக்கலைத் துறையினர் சொட்டுநீர் மற்றும் தெளிப்புநீர் பாசன முறையில் சம்பங்கி, வெண்டை, கத்தரி, அவரை ஆகிய பயிர்களைப் பயிரிட்டுள்ளனர்.

இதனை, வேளாண் துறை அமைச்சர் எஸ். தாமோதரன் ஆய்வு மேற்கொண்டார். தோட்டக்கலை துணை இயக்குநர் எஸ்.வீ.கே. ராஜேந்திரன், தோட்டக்கலை உதவி இயக்குநர் மோகன்குமார் ஆகியோர் அமைச்சருக்கு விளக்கமளித்தனர்.

அப்போது, அரசு வழங்கும் மானியத்தை உயர்த்த வேண்டும். பூ விற்பனை செய்ய முறையான சந்தைப்படுத்துதல் வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

பின்னர், வாலாந்தூரில் நெல் சாகுபடியைப் பார்வையிட்டு, உதவி

வேளாண்மை இயக்குநர் விஜயலட்சுமியிடம் நோய்கள் குறித்து விவரம் கேட்டறிந்தார்.

அமைச்சருடன், எம்.எல்.ஏ. முத்துராமலிங்கம், ஒன்றிய குழுத் தலைவர் பவளக்கொடி ராசுக்காளை, மாவட்டக் கவுன்சிலர்கள் கே. பண்பாளன், பி. நீதிபதி, போத்திராஜன், நகரச் செயலர் பூமா கே.ஆர். ராஜா, ஒன்றியச் செயலர் சௌந்திரபாண்டி, விவசாயப் பிரிவு வேலுசாமி, தோட்டக்கலை அலுவலர்கள் மணிவேலு, சண்முகசுந்தரம் மற்றும் பலர் உடன் சென்றிருந்தனர்.

## தேசிய வாழை கருத்தரங்கு

தேனி அருகே பழனிசெட்டிபட்டியில் தோட்டக் கலை மற்றும் மலைப் பயிர் சாறை சார்பில் சனிக்கிழமை தேசிய வாழை கருத்தரங்கம் நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் கே.எஸ்.பழனிசாமி தலைமை வகித்தார். உணவு பதப்படுத்தும் துறை இணைச் செயலர் வெங்கடேஸ்வரலு, தோட்டக் கலை மற்றும் மலைப் பயிர் துறை ஆணையர்

சந்தோஷ்பாபு, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத் துணைவேந்தர் கே. ராமசாமி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

**குறுவை , சம்பா சாகுபடி பாதிப்பு : தஞ்சையில் தீபாவளி விற்பனை மந்தம்**

தீபாவளி பண்டிகைக்கு 10 நாள்களே உள்ள நிலையில், தஞ்சாவூர் கடைவீதிகளில் தீபாவளி விற்பனை மிகவும் மந்தமாகவே காணப்படுகிறது.

டெல்டா மாவட்டங்களில் எப்போதும் குறுவை சாகுபடியைப் பொருத்துதான் தீபாவளி விற்பனை இருக்கும்.

கடந்த ஆண்டு குறுவை சாகுபடி இயல்பான பரப்பளவை எட்டியதால், தஞ்சாவூர் கடைவீதிகளில் இதேநேரத்தில் அதிகக் கூட்டம் இருந்தது.

நிகழாண்டு மேட்டூர் அணையில் போதிய அளவுக்கு தண்ணீர் இல்லாததால், மிகவும் காலதாமதமாக செப். 17-ம் தேதிதான் அணை திறக்கப்பட்டது.

இதனால், டெல்டா மாவட்டங்களில் மோட்டார் பம்ப்செட் வசதி உள்ள விவசாயிகள் மட்டுமே குறுவை சாகுபடியை மேற்கொண்டனர்.

எனவே, இயல்பான பரப்பளவில் ஏறத்தாழ 50 சதவீத பரப்பில்தான் குறுவை சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. பெரும்பாலான விவசாயிகள் குறுவை சாகுபடியைக் கைவிட்டனர்.

மிகுந்த எதிர்பார்ப்புடன் இருந்த சம்பா சாகுபடியும் தொடர் மழை, அணையில் போதிய அளவுக்குத் தண்ணீர் இல்லாதது போன்ற காரணங்களால் தஞ்சாவூர் மாவட்டத்தில் ஏறத்தாழ 50 சதவீதம் மட்டுமே மேற்கொள்ளப்பட்டது.

இதனால், தீபாவளி பண்டிகைக்கு ஏறத்தாழ 10 நாள்களே உள்ள நிலையில், தஞ்சாவூர் நகர கடைவீதிகளில் இன்னும் அதற்கான பரபரப்பு காணப்படவில்லை.

குறுவை சாகுபடி வெற்றிகரமாக அமைந்தால், ஜவுளிக் கடைகளில் தீபாவளி பண்டிகைக்கு 20 நாள்களுக்கு முன்பே கூட்டமும் அதிகமாகக் காணப்படும். குறிப்பாக, விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களின் வருகை அதிமாக இருக்கும். தஞ்சாவூர் காந்திஜி சாலையில் கடைசி 10 நாள்களில் போக்குவரத்து மாற்றம் செய்யும் அளவுக்கு மக்கள் நெரிசல் இருக்கும்.

இப்போது, அரசு, தனியார் துறை ஊழியர்களின் வருகைதான் ஜவுளிக் கடைகளில் அதிகமாக இருக்கிறது. விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களின் வருகை குறைவாக உள்ளது. சில பிரதான கடைகளைத் தவிர, மற்ற கடைகளில் மக்கள் வருகை இல்லை.

எனவே, கடந்த ஆண்டில் காணப்பட்ட கூட்டத்தில் இப்போது 50 சதவீதம்தான் இருக்கிறது.

கடந்த ஆண்டு விவசாயிகளிடையே வாங்கும் திறன் அதிகமாக இருந்ததால், வர்த்தகமும் எதிர்பார்த்த அளவுக்கு இருந்தது.

நிகழாண்டு விவசாயிகள் வந்தாலும் அவர்களுடைய வாங்கும் திறன் குறைவாக இருக்கிறது என வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

இதுகுறித்து தஞ்சை மாவட்ட காவிரி விவசாயிகள் பாதுகாப்புச் சங்கச் செயலர் சுவாமிமலை சுந்தரவிமல்நாதன் கூறியது:

மேட்டூர் அணையில் உரிய காலத்தில் தண்ணீர் திறக்கப்பட்டால் ஐப்பசி மாதத்தில் குறுவை அறுவடை மேற்கொள்ளப்படும். எனவே, டெல்டா மாவட்டங்களில் தீபாவளி பண்டிகை பரபரப்பும், வியாபாரமும் 25 நாள்களுக்கு முன்பே தொடங்கிவிடும். இதுமட்டுமல்லாமல், குறுவை சாகுபடியில் கிடைக்கும் வருவாய் மூலம் திருமணம், காதணி விழா போன்ற விழாக்களும் நடத்தப்படும்.

ஆனால், நிகழாண்டு குறுவை சாகுபடி இல்லாததால், விவசாயிகளிடம் பணப்புழக்கம் இல்லை. இதனால், அடுத்து சம்பா சாகுபடியையும் தொடங்க முடியாத நிலையில் விவசாயிகள் உள்ளனர். இந்தச் சூழ்நிலையில், விவசாயிகளுக்கு தீபாவளி குறித்து யோசிக்க வாய்ப்பில்லாமல் உள்ளது. எனவே, நியாய விலைக் கடைகள் மூலம் இனிப்புகள் தயாரிப்பதற்குத் தேவையான பொருள்களை வழங்க அரசு முன்வர வேண்டும் என்றார் விமல்நாதன். இதனிடையே, கடைசி ஒரு வாரத்தில் கூட்டம் வரலாம் என்ற எதிர்பார்ப்பில் வியாபாரிகள் உள்ளனர்.

## பயிர்க் காப்பீடு செய்ய விவசாயிகள் முன்வர வேண்டும் : நாகை ஆட்சியர் வேண்டுகோள்

நாகை மாவட்டத்தில் இதுவரை பயிர்க் காப்பீடு செய்யாத விவசாயிகள் உடனடியாக பயிர்க் காப்பீடு செய்து கொள்ள முன்வர வேண்டும் என்றார் நாகை மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி.

திருக்கடையூர் அரசு விதைப் பண்ணையில் சம்பா சிறப்பு தொகுப்புத் திட்டத்தில் அமைக்கப்பட்டிருந்த சமுதாய நாற்றங்காலிலிருந்து நாற்றுகளை விவசாயிகளுக்கு வழங்கும் பணியை வெள்ளிக்கிழமை தொடக்கி வைத்த அவர் பேசியது:

மேட்டூர் அணையில் போதுமான தண்ணீர் இருப்பு இல்லாததாலும், பருவமழை தாமதப்பட்டதாலும் சம்பா சாகுபடியில் சுணக்கம் ஏற்படக் கூடாது என்பதைக் கருத்தில் கொண்டு தமிழக அரசு,சம்பா சிறப்புத் தொகுப்புத் திட்டத்தை அறிவித்தது.

இத்திட்டன்கீழ், நாகை மாவட்டத்தில் 63,772 ஹெக்டேரில் நேரடி நெல் விதைப்பும், 41,228 ஹெக்டேரில் நெல் நடவுப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சமுதாய நாற்றங்கால் அமைக்க ஒரு ஹெக்டேருக்கு ரூ. 47,500 வீதம், 1,000 ஹெக்டேருக்கு ரூ. 4.75 கோடி மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், சம்பா சிறப்பு தொகுப்புத் திட்டத்தின் கீழ் நேரடி நெல் விதைப்பு திட்டத்துக்கு ரூ. 11.73 கோடி நாகை மாவட்டத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சம்பா சிறப்பு தொகுப்புத் திட்ட நேரடி நெல் விதைப்பு குறித்த தொழில் நுட்பங்கள் குறித்த சந்தேகங்களுக்கு அருகிலுள்ள வேளாண் அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம்.

இதுவரை பயிர்க் காப்பீடு செய்யாத விவசாயிகள் உடனடியாக பயிர் காப்பீடு செய்து கொள்ள முன்வர வேண்டும் என்றார் மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி.

வேளாண் துறை இணை இயக்குநர் உ. ராஜேந்திரன், உதவி இயக்குநர் வெற்றிவேல், வேளாண் அலுவலர்கள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள், முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## விளை நிலங்களைச் சூழ்ந்த கச்சா எண்ணெய்



நாகை மாவட்டம், கீழ்வேளூர் பகுதியில் நிலத்தடியில் புதைக்கப்பட்டுள்ள எண்ணெய் குழாயில் ஏற்பட்ட உடைப்பு காரணமாக அப்பகுதியைச் சேர்ந்த விளை நிலங்கள் வெள்ளிக்கிழமை கச்சா எண்ணெய்யால் சூழப்பட்டன.

திருவாரூர் மாவட்டம், கருப்பூரிலிருந்து, நாகை மாவட்டம், பனங்குடியில் உள்ள ஓர் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்துக்கு பூமிக்கடியில் புதைக்கப்பட்ட குழாய்கள் மூலம் கச்சா எண்ணெய் கொண்டுச் செல்லப்படுகிறது.

கீழ்வேளூர், ஆணைமங்கலம் ஊராட்சிக்குள்பட்ட மஞ்சவாடி அருகே உள்ள பள்ளவயல் என்ற பகுதியில்,எண்ணெய் குழாயில் ஏற்பட்ட விரிசல் மூலம் வெளிப்பட்ட எண்ணெய்த் திவலைகள், மழை நீருடன் கலந்து சுமார் 50 ஏக்கருக்கும் அதிகமான பரப்பிலான விளைநிலங்களைச் சூழ்ந்தது.

மேலும், அப்பகுதி பாசன வாய்க்கால்களான ஆணைமங்கலம், மஞ்சவாடி வாய்க்கால்களிலும், எண்ணெய் திவலைகள் கலந்தன.

ஏற்கெனவே வருவாய்க் கோட்டாட்சியர் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தை ஒப்பந்தப்படி, விளை நிலங்களுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும்; இதுபோன்ற பிரச்னை இனிவரும் காலங்களில் ஏற்படாமலிருக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

05.11.2012 A.M

## மஞ்சளை உலர வைப்பதில் சிக்கல் : வியாபாரிகள் திண்டாட்டம்



ஈரோடு: தொடர் மழையால், ஈரோடு சாயக்கலங்களில், மஞ்சளை உலர வைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இந்தியாவில் ஆண்டுக்கு, 185.32 லட்சம் ஹெக்டரில், 701.66 லட்சம் டன் மஞ்சள் உற்பத்தியாகிறது. தமிழகத்தில் ஆண்டுக்கு, 33 லட்சம் ஹெக்டேரில், 158.64 லட்சம் டன் மஞ்சள் விளைகிறது. இந்தியாவில், மஞ்சள் சந்தையில் ஆந்திர மாநிலம் நிஜாமாபாத் முதலிடத்திலும், தமிழகத்தின் ஈரோடு, இரண்டாவது இடத்திலும் உள்ளன.ஈரோடு ஒழுங்கு முறை விற்பனை மையத்தின் கண்காணிப்பில், 205 தனியார் கமிஷன் மண்டிகளும், 135 தனியார் ஏற்றுமதி நிறுவனங்களும் உள்ளன. இவை தவிர, ஈரோடு கூட்டுறவு சங்கம், கோபி கூட்டுறவு சங்கம் ஆகியவையும் உள்ளன.ஈரோடு மஞ்சள் சந்தைக்கு, அந்த மாவட்டத்தில் இருந்து, 60 சதவீத மஞ்சளும், கர்நாடகா, திருவண்ணாமலை, சேலம், தர்மபுரி, வேலூர் போன்ற பகுதிகளில் இருந்து, 40 சதவீதம் மஞ்சளும் வருகின்றன.ஈரோடு மாவட்டத்தில் விளையும் மஞ்சள், பஞ்சாப், டில்லி, காஷ்மீர், கேரளா, ராஜஸ்தான், மஹாராஷ்டிரா ஆகிய மாநிலங்களுக்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

"கோரா' எனப்படும் பாலிஷ் மஞ்சளும், சாயமிடப்பட்ட சாயச்சரக்கு மஞ்சளும் அதிகளவில் வெளிமாநிலங்களில் விற்கப்படுகின்றன."கோரா' சரக்கு மஞ்சள், உலர்ந்த நிலையில் கல், கூழாங்கல், கோனை கிழங்கு, பனங்ககாளி ஆகியவை கழித்து கோல்கட்டா, ஒடிசா போன்ற

மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறது.

சாயசரக்கு மஞ்சளுக்கு பீகார், உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களில் அதிக வரவேற்பு உள்ளது. தமிழகம் மற்றும் வெளிமாநிலங்களில், மிதமான அளவில் மழை பெய்து வருகிறது. "கோரா' மற்றும் சாயசரக்கு மஞ்சள் உற்பத்திக்கு தட்பவெப்பம் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.தற்போது, பருவமழையால், சாயசரக்கு மஞ்சள் உற்பத்தி குறைந்துஉள்ளது. மஞ்சள் கலத்தில் சாயசரக்கை உலர்த்துவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.நல்ல வெயில் வரும் வரை இப்பணி தடைபடும் என்பதால், மஞ்சள் விலை உயரும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

## விதை பண்ணையில் இணை இயக்குனர் ஆய்வு

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், கோவை விதை சான்று மற்றும் அங்ககச்சான்று இயக்குனர் அலுவலக விதை சான்று இணை இயக்குனர் தங்கராசு ஆய்வு செய்தார். நல்லம்பள்ளி யூனியன், மிட்டதின்னஹள்ளியில் விவசாயி கந்தசாமி நிலத்தில், இரண்டு ஏக்கரில் அமைக்கப்பட்ட நெல் விதைப்பண்ணையை பார்வையிட்டார். விதைப்பண்ணை பரப்பு, பயிர் ரகம், பயிரின் நிலை, விதைப்பண்ணை விவசாயிகளுக்கு ஏற்படும் பயன்கள் ஆகியவை குறித்து விவசாயிகளிடம் கேட்டறிந்தார். கள ஆய்வுக்கு பின் தர்மபுரி விதை சான்று உதவி இயக்குனர் அலுவலகத்தில் ஆய்வு செய்தார். அப்போது, மாவட்டத்தில், இது வரையில் சான்றழிப்பு வகையில், 734.4 ஹெக்டேரில் விதைப்பண்ணை பதிவு செய்யப்பட்ட விபரம், சுத்தம் செய்த விதை அளவு, 311.31 மெட்ரிக் டன் மற்றும் சான்று செய்த 429.99 மெட்ரிக் டன் விதைகள் சாதனை செய்த வகையை உரிய பதிவேட்டை பார்வையிட்டு ஆய்வு செய்தார். உதவி இயக்குனர் கிருஷ்ணன், விதை பரிசோதனை அலுவலர் பெரியசாமி, வேளாண் அலுவலர் நல்லம்பள்ளி மணிராஜன், விதை பரிசோதனை நிலைய வேளாண் அலுவலர் முனிகிருஷ்ணன் ஆகியோர் ஆய்வின் போது உடனிருந்தனர். ஏற்பாடுகளை விதைசான்று அலுவலர்கள் பழனிசாமி (தர்மபுரி), அருணன் (அரூர்), சுப்பிரமணி (நல்லம்பள்ளி), உதவி விதை அலுவலர் செல்வம் ஆகியோர் செய்திருந்தனர்.

## உழவர் பாதுகாப்பு திட்டம் சிறுவாடியில் ஆலோசனை

மரக்காணம்:சிறுவாடியில் உழவர் பாதுகாப்பு திட்டம் குறித்து, ஊராட்சி தலைவர்களுக்கான ஆலோசனை கூட்டம் நடந்தது.மரக்காணம் அடுத்த சிறுவாடி வருவாய் ஆய்வாளர் அலுவலகத்தில் நகர், முன்னூர், ஆலங்குப்பம், ஆடவல்லிக்கூத்தான் உள்ளிட்ட 15 ஊராட்சிகளின் தலைவர்களுக்கு ஆலோசனைக் கூட்டம் நடந்தது.உழவர் பாதுகாப்பு திட்ட தாசில்தார் சத்தியமூர்த்தி தலைமை தாங்கினார். மண்டல துணை தாசில்தார் மதியழகன் முன்னிலை வகித்தார். வருவாய் ஆய்வாளர் வரவேற்றார்.கூட்டத்தில் வி.ஏ. ஓ.,க்கள் ரத்தினசபாபதி, பாண்டுரங்கன் மற்றும் ஊராட்சித் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

**பூக்களை விற்பனை செய்ய மார்க்கெட் தேவை : சின்னசேலம் பகுதி விவசாயிகள் தவிப்பு**

சின்னசேலம்:சின்னசேலம் பகுதிகளில் பூக்கள் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் உள்ளூரில் மார்க்கெட் இல்லாமல் அவதிப்பட்டு வருகின்றனர். இவர்கள் வெளி யூர்களுக்கு கொண்டு சென்று பூக்களை விற்பனை செய்ய வேண்டிய நிலை நீடிக்கிறது.சின்னசேலம் சுற்றியுள்ள கருங்குழி, ஈரியூர், தொட்டியம் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட கிராம பகுதிகளில் அதிகளவில் பூக்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.இப்பகுதியில் 100 ஏக்கருக்குமேல் சம்பங்கி, ரோஜா, துளுக்க சாமந்தி, மல்லி போன்ற பூ வகைகள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றது. அதிக வருமானம் கிடைப் பதால் விவசாயிகள் ஆர்வம் அதிகரித்து, இதனால் ஆண்டுதோறும் சாகுபடி பரப்பு அதிகரித்து வருகிறது. சின்னசேலம் பகுதியில் பூ விற்பனை செய்ய மார்க்கெட் இல்லாமல் பூக்களை பறித்து எடுத்துக்கொண்டு வெளியூர் செல்ல வேண்டியுள்ளது.

கடலூர் மாவட்டம் விருத்தாசலத்திற்கும், சேலம் மாவட்டம் ஆத்தூருக்கும் 50 கி.மீட்டர் தூரம் கொண்டு சென்று பூக்களை விற்பனை செய்து வரும் நிலை நீடிக்கிறது.விவசாயிகள் தினமும் காலையில் பூக்களை பறித்து இருசக்கர வாகனங்களில் பஸ் நிலையத்திற்கு கொண்டு சென்று, அங்கிருந்து பஸ் மூலம் வெளியூர்களுக்கு விற்பனைக்கு கொண்டு செல்கின்றனர்.குறிப்பிட்ட நேரத்திற்குள் செல்ல முடியாத நிலையில் பூக்கள் வாடுவதால், குறைந்த விலைக்கு விற்கும் நிலையும் அடிக்கடி ஏற்படுகிறது.பூக்கள் விற்பனை செய்ததற்கான பணமும் உடனடியாக விவ சாயிகளுக்கு கிடைப்பதில்லை.சின்னசேலம், நைனார்
பாளையம், கூகையூர் உள்ளிட்ட இடங்களில் 20க்கும் மேற்பட்ட பூக்கடைகள் உள்ளது. அவர்கள் திருவண்ணாமலை, ஆத்தூர் உள்ளிட்ட நகரங்களில் இருந்து பூக்களை வரவழைக்கின்றனர். இவர்கள் நேரடியாக விவசாயிகளிடம் இருந்து பூக்கள் வாங்க முடியாமல் கூடுதல் விலை கொடுத்து வாங்கி வருகின்றனர். ஆனால் உள்ளூரிலேயே விளையும் பூ வகைகளை வாங்க மார்க்கெட் இல்லாமல் அவர்களும் பாதிக்கின்றனர்.சின்னசேலம் பகுதியில் 15 ஆண்டுகளுக்கு மேலாக பூக்கள் சாகுபடி செய்யப்பட்டுவரும் நிலையில் பூ விற்பனைக்கு மார்க்கெட் துவக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை.
இங்கு பூ மார்க்கெட் அமைந்தால், விவசாயிகள் தங்கள் நிலங்களில் பூத்த மலர்களை உரிய நேரத்தில், அலைச்சல் இன்றி விற்க ஏதுவாக இருக்கும். மேலும் பூ கடைகள் வைத்திருப் பவர்கள் நேரடியாக விவசாயிகளிடம் இருந்து பூக்கள் வாங்குவதால் அவர்களுக்கும் கூடுதல் வருமானம் கிடைக்கும்.

## நீலம் புயலினால் ஏரிகளுக்கு நீர் வரத்து துவங்கியது : செஞ்சி பகுதி விவசாயிகள் உற்சாகம்

செஞ்சி:செஞ்சி பகுதியில் வறண்டு கிடந்த ஏரிகளுக்கு நீலம் புயலினால் நீர் வரத்து துவங்கி இருப்பதால் விவசாயிகள் உற்சாகமடைந்துள்ளனர்.ஒவ்வொரு ஆண்டும் வடகிழக்கு பருவமழை துவங்குவதற்கு முன்பாக ஆகஸ்ட் மாத மத்தியில் துவங்கும் மழையினால் செப்டம்பர் மாத இறுதிக்குள் செஞ்சி பகுதியில் உள்ள பெருமளவு ஏரிகள் நிரையும் தருவாயில் இருக்கும்.அக்டோபர் மாத மத்தியில் துவங்கும் வடகிழக்கு பருவமழை தீவிரமடையும் போது அனைத்து ஏரிகளும் நிறைந்து உபரி நீர் வெளியேறும். இதில் இருந்து வெளியேறும் நீரினால் வராகநதி மூலம் சங்கராபரணி ஆற்றில் வெள் ளம் செல்வது வழக்கம்.செஞ்சி பகுதியில் 103 பொதுப்பணித்துறை ஏரிகளும், 235 ஒன்றிய நிர்வாக ஏரிகள் என மொத்தம் 338 ஏரிகள் உள்ளன. இந்த ஏரிகளில் இருந்து 34 ஆயிரத்து 129 ஏக்கர் நிலங்கள் இரண்டு போகம் பாசன வசதி பெறுகின்றன.கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் பாதிக்கும் மேற்பட்ட ஏரிகள் நிரம்பி இருந்தன. மாவட்டத்தில் பெரிய ஏரிகளில் ஒன்றான பனமலை ஏரி முக்கால் பங்கு நிறைந்திருந்தது.

இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை துவங்கிய பிறகும் மழை இல்லாமல் அனைத்து ஏரிகளும் வறண்டு கிடந்தன. வடகிழக்கு பருவமழை துவங்கி நீலம் புயல் வருவதற்கு முன்பு வரை (அக்.9 முதல் 23ம் தேதிவரை) செஞ்சி பகு தியில் 12.4 செ.மீ., மழையே பதிவாகி இருந்தது.இதனால் விவசாயிகள் கவலையில் இருந்தனர்.நீலம் புயல் காரணமாக கடந்த 1ம் தேதி 112 மி.மீ., மழை பதிவானது. இதனால் காடு, மலை பகுதிகளில் இருந்து மழை வெள் ளம் ஏரிகளுக்கு வர துவங்கியது. சங்கராபரணி ஆற்றிலும் வெள்ளம் ஓட துவங்கியது.ஏரிகளுக்கு தண்ணீர் வரத்து துவங்கியதால் ஏரிகளை நம்பி பாசனம் செய்யும் விவசாயிகள் நம்பிக்கை அடைந்துள்ளனர். கிணற்று பாசனம் செய்யும் விவசாயிகளும் நம்பிக்கையுடன் விவசாய பணிகளை செய்ய துவங்கி உள்ளனர்.அடுத்து வரும் நாட்களில் மழை மூலம் இந்த ஆண்டு சாகுபடிக்கு தேவையான தண்ணீர் கிடைக்கும் என்ற நம்பிக்கை செஞ்சி பகுதி விவசாயிகளிடம் ஏற்பட்டுள்ளது.

## உழவர் பாதுகாப்பு திட்ட பயன்களை பெற விண்ணப்பங்கள் வரவேற்பு

காஞ்சிபுரம்:காஞ்சிபுரம் மாவட்டத்தில், முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ், பயன்பெற விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இதற்காக நடத்தப்படும் சிறப்பு முகாம்களில், இன்று முதல் 9ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம்.முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் உறுப்பினர்களைப் பதிவு செய்ய, கிராம நிர்வாக அலுவலர்கள் மூலம், ஒவ்வொரு கிராமத்திலும், குடும்ப அட்டை அடிப்படையில், கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. தகுதியுள்ள நபர்கள், குடும்ப அட்டை எண்ணுடன் பதிவு செய்யப்பட்டனர்.

உறுப்பினர் சேர்க்கைஇரண்டரை ஏக்கருக்கு மேற்படாத நன்செய் நிலம் அல்லது ஐந்து ஏக்கருக்கு மேற்படாத புன்செய் நிலம், சொந்தமாக வைத்திருந்து, அந்த நிலத்தில் நேரடியாக பயிர் செய்யும், 18 வயது முதல், 65 வயது வரை உள்ள, அனைத்து குறு, சிறு விவசாயிகள், நிலத்தை குத்தகை அடிப்படையில் எடுத்து விவசாயம் செய்வோர், விவசாய கூலித் தொழிலாளர்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டனர்.

வழங்கப்படும் உதவிகள்

விபத்தில், மரணம், கை, கால்கள் இழப்பு, கண்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு லட்ச ரூபாய். விபத்தில், ஒரு கை, ஒரு கால் இழந்தவர்களுக்கும், பக்கவாதம் ஏற்பட்டவர்களுக்கும், 50 ஆயிரம் ரூபாய்.

பலத்த காயமடைந்து கை அல்லது கால் இழந்தவர்களுக்கு, 20 ஆயிரம் ரூபாய், இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கிற்கு, 12, 500 ரூபாய்.திருமண உதவித் தொகையாக ஆண்களுக்கு, 8,000 ரூபாய், பெண்களுக்கு, 10 ஆயிரம் ரூபாய்.தொழிற் பயிற்சி, கலை ஆசிரியர் பயிற்சி, செவிலியர் பட்டய பயிற்சி படிக்கும் மாணவர்கள் விடுதியில் தங்கியிருந்தால், மாணவர்களுக்கு ஆண்டுக்கு, 1,450 ரூபாய், மாணவிக்கு, 1,950 ரூபாய், விடுதியில் தங்காத மாணவருக்கு, 1,250 ரூபாய், மாணவிக்கு, 1,750 ரூபாய்.சட்டம், பொறியியல், மருத்துவம், கால்நடை அறிவியல், வேளாண்மை உட்பட, தொழிற்கல்வி படிக்கும் மாணவருக்கு, ஆண்டுக்கு, 2,250 ரூபாய், மாணவிக்கு, 6,750 ரூபாய்.

விண்ணப்பிக்கலாம்...

"முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ், நலத் திட்டங்களைப் பெற தகுதியான உறுப்பினர்கள், அதற்குரிய விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து, சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் அல்லது சமூக பாதுகாப்பு திட்ட தனி வட்டாட்சியரிடம் அளிக்கலாம். உறுப்பினராக சேர விரும்புவோர் உடனடியாக சேரலாம்,' என, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் சித்ரசேனன் தெரிவித்துள்ளார்.கொடிய நோய்க்கும் நிவாரணம் உழவர் பாதுகாப்பு திட்டத்தில் உள்ள உறுப்பினர்களில், 60 வயது நிரம்பிய ஆதரவற்றவர்கள், கொடிய நோய்களான புற்றுநோய், எய்ட்ஸ், காசநோய், போன்றவற்றால் பாதிக்கப்பட்டு, சிகிச்சைப் பெற்று வந்தால், அவர்களுக்கு சிகிச்சைக் காலத்திற்கு தற்காலிக நிவாரணமாக மாதம், 1,000 ரூபாய் வழங்கப்படும். இதைப் பெற விரும்புவோர் விண்ணப்பிக்கலாம்..9ம் தேதி வரை

சிறப்பு முகாம்

உழவர் பாதுகாப்பு திட்டத்தில் உறுப்பினராக சேர்ந்துள்ளவர்கள், நலத் திட்ட உதவிகளை பெற விண்ணப்பிப்பதற்காக, இன்று முதல், 9ம் தேதி வரை, காஞ்சிபுரம் மாவட்டத்தில் சிறப்பு முகாம் நடைபெற உள்ளது. அந்தந்த பகுதி கிராம நிர்வாக அலுவலர்களால் நடத்தப்படும் முகாமில், நலத் திட்ட உதவி பெற தகுதியானவர்கள் விண்ணப்பங்களை அளிக்கலாம்.

## உழவர் பாதுகாப்பு அட்டை ஆலோசனைக் கூட்டம்

உடையார்பாளையம்: உழவர் பாதுகாப்பு அட்டை வழங்குவது தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் டி.ஆர்.ஓ., பங்கேற்றார். உடையார் பாளையம் அருகேயுள்ள, ஜெயங்கொண்டம் தாலுகா அலுவலகத்தில், இயற்கை இடர்பாடுகள் உழவர் பாதுகாப்பு அட்டை வழங்குவது பற்றிய ஆலோசனை கூட்டம் நடந்தது. கூட்டத்தில் டி.ஆர்.ஓ., கருப்புசாமி தலைமை வகித்து பேசுகையில், ""ஆங்காங்கே நடக்கும் மழை, சேதம் இயற்கை இடர்பாடுகள் குறித்து அவ்வபோது மேலதிகாரிகளுக்கு தெரிவிக்கவேண்டும். பாதுகாப்பு அட்டை, முதியோர் உதவித்தொகை வழங்க, பொதுமக்களிடம் மனுக்களை பெற்று, விதி முறைகளுக்கு உட்பட்டு முறையாக விசாரிக்க வேண்டும்," என்று பேசினார். தாசில்தார் முகுந்தன், சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தார் ரவி, வருவாய் ஆய்வாளர்கள், வி.ஏ.ஓ.,க்கள் பங்கேற்றனர்.

## குன்னூர் தேயிலை ஏலத்தில் சரிவு

குன்னூர்:குன்னூர் தேயிலை ஏலத்தில் இந்த வாரமும் 2 ரூபாய் சரிவு காணப்பட்டது. குன்னூர் தேயிலை வர்த்தகர்கள் சங்கத்தின் 44வது ஏலம் கடந்த 1 மற்றும் 2ம் தேதிகளில் நடந்தது. இதில், மொத்தம் 13.24 லட்சம் கிலோ தேயிலை விற்பனைக்கு வந்தது. இதில் இலை ரகம் 9.70 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 3.54 லட்சம் கிலோவும் அடங்கும். இந்த வாரம் ஏலத்தில் 85 சதவீத தேயிலை தூள் விற்பனையானது.மேலும், விலையிலும் தொடர்ந்து வீழ்ச்சி ஏற்பட்டு வருகிறது. இந்த வாரமும் விலையில் 2 ரூபாய் சரிவு காணப்பட்டது. சாதாரண இலை ரகத்துக்கு 70-75 ரூபாய் வரையிலும், உயர் வகைக்கு 95-130 ரூபாய் வரையிலும், டஸ்ட் ரகத்தில் சாதாரண ரகத்துக்கு 76-82 ரூபாய் வரையிலும், உயர் வகைக்கு 100-140 ரூபாய் வரையிலும் விலை கிடைத்தது. அதிகபட்சமாக "சிடிசி' டஸ்ட் ரக ஒரு கிலோ தேயிலை தூளுக்கு 150 ரூபாயும், ஆர்தோடக்ஸ் ரகத்துக்கு 210 ரூபாயும் விலை கிடைத்தது. வரும் 8 மற்றும் 9ம் தேதிகளில் நடக்கும் 45வது ஏலத்திற்கு தேயிலை தூள் தயாராக உள்ளது.

## கொப்பரை தேங்காய் உலர் கலன் அமைத்த விவசாயிக்கு பாராட்டு

பட்டுக்கோட்டை: மழைக்காலத்தில் தேங்காயை உலர்த்தும் வகையில், ஐந்து லட்சம் ரூபாய் செலவில் கொப்பரை தேங்காய் உலர்கலனை அமைத்த விவசாயிக்கு, மத்திய இணையமைச்சர் பழனிமாணிக்கம் பாராட்டு தெரிவித்தார்.

பட்டுக்கோட்டை அருகேயுள்ள அழகியநாயகிபுரம் பகுதியைச் சேர்ந்த விவசாயி வைத்திலிங்கம். இவர் தனக்கு சொந்தமான இடத்தில் சூரிய ஒளி மின்சாரத்தில் இயங்கும் கொப்பரை தேங்காய் உலர் களத் தை, ஐந்து லட்சம் ரூபாய் செலவில் அமைத்துள்ளார். இதுகுறித்து விபரம் அ றியவும், முன்னோடி திட்டத்தில் ஆர்வமாக செயல்பட்ட விவசாயி வைத்திலிங்கத்தை பாராட்டவும், மத்திய இணையமைச்சர் பழனிமாணிக்கம் உலர்கலன் அமைத்த இடத்துக்கு நேரில் சென்றார். அங்கு

அமைக்கப்பட்டுள்ள உலர்கலன், அதன் செயல்பாடுகள், நன்மைகள் குறித்து கேட்டறிந்தார். பின்னர், மத்திய நிதித்து றை இணையமைச்சர் பழனிமாணிக்கம் கூறியதாவது:
மழைக்காலங்களில் கூட தேங்காய்களை உலர்த்தும் வகையில், சூரிய ஒளி கொப்பரை உலர் கலனை விவசாயி வைத்திலிங்கம் தனது முயற்சியால் அமை த்துள்ளார். இந்த உலர்கல ன் மூலம், 15 நாட்கள் வெ யிலில் காயவைத்து உலர்த் த வேண்டிய கொப்பரைகளை, வெறும் ஐந்து நாட்களில் உலர்த்த முடியும். இதே போல பெரிய அ ளவில் உலர்கலன்கள் அØ மத்து, குறைந்தபட்ச வாடகைக்கும் விட முடியும். இந்த கலன்கள் அமைக்க தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன் உத வி கிடைக்க, அந்தந்த பகுதிகளுக்கு வங்கி அதிகாரிகள் நேரில் வந்து ஆய்வு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார். அமைச்சருடன், அகில இந்திய கயிறு வாரிய முன்னாள் உறுப்பினர் பழனிவேலு உள்பட பலர் உடனிருந்தனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

05.11.2012 A.M

## நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை கடும் வீழ்ச்சி



நாமக்கல் : கர்நாடகாவில் ஏற்பட்ட பறவைக் காய்ச்சல் நோய் காரணமாக கேரள மாநிலமும், ஓமன் நாடும் நாமக்கல் முட்டைகளை வாங்க மறுப்பதால் கோழிப்பண்ணை தொழில் ஸ்தம்பித்துள்ளது. கர்நாடகாவில் பெங்களூர் அருகே உள்ள மத்திய அரசின் வான்கோழிப்பண்ணையில் அக்டோபர் 26ம் தேதி பறவைக் காய்ச்சலால் கோழிகள் இறந்தன. இதையடுத்து, கேரள அரசு வெளி மாநிலத்தில் இருந்து கறிக்கோழிகள், முட்டைகள் கொண்டு வர தடை விதித்தது. இதனால், நாமக்கல்லில் இருந்து கேரளாவுக்கு கடந்த 6 நாட்களாக முட்டை கொண்டு செல்லவில்லை.

இந்நிலையில், நேற்று முன்தினம் ஓமன் அரசும் இந்திய முட்டை இறக்குமதிக்கு தடை விதித்தது. நாமக்கல்லில் இருந்து ஓமனுக்கு தினமும் 20 லட்சம் முட்டைகள் அனுப்பப்பட்டு வந்தன. இதனால், நாமக்கல் மண்டலத்தில் முட்டை ஏற்றுமதி முடங்கியுள்ளது. கோழிப்பண்ணை தொழில் அடியோடு ஸ்தம்பித்துள்ளது.

தற்போது, தேங்கியுள்ள 6 கோடி முட்டைகளை மற்ற மாநிலங்களுக்கு அனுப்ப பண்ணையாளர்கள் முயன்று வருகிறார்கள். இதனால், முட்டை விலையை முடிந்த வரை குறைத்து வியாபாரிகள் வாங்கிச் செல்கிறார்கள். நேற்று முன்தினம் தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு, முட்டை விலையை குறைத்து 300 காசுகளாக நிர்ணயித்தது. ஆனால், பல பண்ணையாளர்கள் ரூ.2 முதல் ரூ.2.30க்கே முட்டையை விற்கின்றனர்.

கடந்த 5 நாட்களாக கறிக்கோழியும் கேரளாவுக்கு போகாததால் அதன் விலையும் வீழ்ச்சி அடைந்து வருகிறது. கடந்த வாரம் ஒரு கிலோ கறிக்கோழி ரூ.120க்கு விற்பனையானது. தற்போது நாமக்கல் பகுதியில் ஒரு கிலோ கறிக்கோழி ரூ.60 முதல் ரூ.70 வரை மட்டுமே விற்பனையாகிறது.

## குன்னூர் ஏலத்தில் தேயிலை தூள் விலை சரிவு



குன்னூர் : நீலகிரி மாவட்டம், குன்னூர் சிடிடிஏ ஏல மையத்தில் தேயிலை தூள் ஏலம் நடைபெற்றது. மொத்தம் 13.24 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இலை ரகம் 9.70 லட்சம், டஸ்ட் ரகம் 3.54 லட்சம் கிலோவும் அடங்கும். வெளிநாட்டு வர்த்தகர்களும் பங்கேற்றனர்.

ஏல முடிவில் 15 சதவீத தேயிலை தூள் தேக்கம் அடைந்தது. அனைத்து ரகத்திற்கும் கிலோவுக்கு

ரூ.2 வரை விலை சரிந்தது. இலை ரகத்தில் சாதாரண வகை கிலோ ரூ.70 முதல் ரூ.75, உயர் வகை ரூ.95 முதல் ரூ.130, டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ரூ.76 முதல் ரூ.80, உயர் வகை ரூ.100 முதல் ரூ.140 வரை விலை கிடைத்தது.

சிடிசி டஸ்ட் ரகத்திற்கு கிலோ ரூ.150, ஆர்தோடக்ஸ் ரகம் ரூ.210 என விலை கிடைத்தது.

## பாரம்பரிய பொருட்கள் திட்டத்தில் தர்மபுரி உழவர் சந்தைகளில் இளநீர் விழிப்புணர்வு துவக்கம்

தர்மபுரி, : தமிழக அரசு கடந்த சில நாட்களுக்கு முன்பு பாரம்பரிய உணவு பொருட்கள், விவசாய பொருட்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது பற்றிய அறிவிப்பை வெளியிட்டது. இதற்காக விழிப்புணர்வு பிரசாரத்தில் ஈடுபடுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதையடுத்து, தர்மபுரி மாவட்ட வேளாண்மை துறை அதிகாரிகள் பொதுமக்களிடம் பாரம்பரிய பொருட்களான சீகக்காய், பருத்தி, இளநீர் குறித்த விழிப்புணர்வை துவங்கியுள்ளனர்.

மாவட்டத்தில் உள்ள 5 உழவர் சந்தைகளில் இளநீர் பருகுவீர், உடல்நலம் பேணுவீர் என்ற வாசகத்துடன் விவசாய துறையினர் டிஜிட்டல் பேனர் வைத்து விழிப்புணர்வு பிரசாரம் செய்தனர்.

தர்மபுரி உழவர் சந்தைக்கு வரும் நுகர்வோர்களிடம் வேளாண் விற்பனை அதிகாரிகள் இளநீரின் பயன்பாடு, தாதுக்கள், சத்துகள் ஆகியவற்றை எடுத்துக் கூறினர். சுமார் 3 விவசாயிகள் 600க்கும் மேற்பட்ட இளநீரை கொண்டு வந்திருந்தனர். விவசாயிகளிடம் அதிகாரிகள் கடந்த சில நாட்களாக உழவர் சந்தைகளில் இளநீர் விற்பனை செய்யுங்கள் என அறிவுறுத்தி வந்தனர்.

உழவர் சந்தைகளில் வெளிசந்தைகளை காட்டிலும் காய்கறிகள் உள்ளிட்ட விவசாயம் சார்ந்த பொருட்கள் மலிவு விலையில் கிடைக்கும் நிலையில், இளநீர் விற்பனையும் துவங்கப்பட்டுள்ளதை நுகர்வோர்கள் வரவேற்றுள்ளனர்.

## உணவு பதப்படுத்தும் தொழில் செய்ய மானியம் விண்ணப்பிக்க அழைப்பு

நாகை, : உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைச்சகம், தமிழக அரசு ஆகியவை இணைந்து நடப்பாண்டில் தேசிய உணவு பதப்படுத்தும் இயக்கத் திட்டத்தை செயல்படுத்த உள்ளன. இத்திட்டத்தில் மானிய பங்குத் தொ கையை 75:25 என்ற விகிதத் தில் மத்திய அரசும், மாநில அரசும் வழங்க உள்ளது.

தொழில்நுட்பம் மேம்பாடு, உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் ஏற்படுத்துதல், நவீனப்படுத்துதல் ஆகியவற்றுக்கு கருவிகள், தளவாடங்கள், தொழில்நுட்ப கட்டுமானத்திற்கு 25

சதவீதம் அதிகப்பட்சமாக ரூ.50 லட்சம் நிதி உதவி வழங்கப்படும். குளிர்பதன வசதி, குளிரூட்டப்பட்ட வாகனம் போன்ற வசதிகளை தோட்டக்கலை பயிர் அல்லாத பொருட்களுக்கு, கருவிகள், தளவாடங்கள், தொழில்நுட்ப கட்டுமானத்திற்கு 25-50 சதவீதம் அதிகபட்சமாக ரூ.10 கோடி நிதி உதவி வழங்கப்படும். உணவு பதப்படுத் தும் தொழில்நுட்பம் தொ டர்பான பட்டம், பட்டய படிப்புகளுக்கான உள்கட்டமைப்பு வசதிகள் செய்ய, புத்தகங்கள், பரிசோதனை கூட கருவிகள் போன்றவற்றுக்கான உட்கட்டமைப்புகளுக்கு அதிகபட்சமாக ரூ.75லட்சம் நிதியுதவி வழங்கப்படும். தொழில் முனைவோர் பயிற்சிகள் வழங்க ஒரு தொழில் முனைவோர் பயிற்சிக்கு ரூ.2 லட்சம் வழங்கப்படும். உணவு பதப்படுத்தம் பயிற்சி மையங்கள் அமைக்க, ஒரு பொருள் பயிற்சி அதிகபட்சமாக ரூ.4 லட்சம் நிலையான முதலீட்டிற்கும், ரூ.2 லட்சம் சுழற்சி முதலீட்டிற்கும் நிதியுதவி வழங்கப்படும். பல பொருள் பயிற்சி என்றால் அதிகபட்சமாக ரூ.11 லட்சம் நிலையான முதலீட்டிற்கும், ரூ.4 லட்சம் சுழற்சி முதலீட்டிற்கும் வழங்கப்படும்.

கருத்தரங்கம், பணிமனை கூட்டம் நடத்த திட்ட மதிப்பில் 50 சதவீதம் அதிகபட்சமாக ரூ.3 லட்சம் வழங்கப்படும். படிப்பு மற்றும் கணக்கெடுப்பிற்கு திட்ட மதிப்பில் 50 சதவீதம் அதிகபட்சமாக ரூ.3 லட்சம் வழங்கப்படும். கருத்துக்காட்சி மற்றும் கண்காட்சி நடத்த திட்டத்திற்கு ஏற்றவாறு நிதியுதவி வழங்கப்படும். இத்திட்டத்தில் பயன்பெற விரும்புவோர் மானியம் கோரும் புதிய விண்ணப்பங்களை மாவட்ட உணவு பதப்படுத்தும் இயக்கம், வேளாண். துணை இயக்குனர் (வேளாண் வணிகம்) மூலமாக மாநில இயக்கக இயக்குனருக்கு அனுப்ப வேண்டும். மேலும் விவரங்களுக்கு ஷ்ஷ்ஷ்.னீஷீயீஜீவீஸீவீநீ.வீஸீ அறியலாம் என நாகை மாவட்ட வேளாண். துணை இயக்குனர் (வேளாண். வணிகம்) அலுவலக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**முன்பருவ பயிர்களை சாகுபடி செய்து குறைந்த முதலீட்டில் அதிக மகசூல் பெறலாம் வேளா ண்மை உதவி இயக்குனர் தகவல்**

அரவக்குறிச்சி, : விவ சாய உற்பத்தியை பெருக்க அரசு வேளாண்துறை சார்பில் நவீனதொழில் நுட்பத்தை செயல்படுத்த திட்டமிட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக முன்பருவத்தில் பயிர் செய்வது எப்படி, என்னென்ன பயிர்கள் சாகுபடி செய்தால் குறைந்த முதலீட்டில் அதிக மகசூல் பெற்று கூடுதல் லாபம் பெறலாம் என்பது பற்றி விவசாயிகளுக்கு தமிழகம் முழுவதும் முன்பருவ பயிர் முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக அரவக்குறிச்சியை அடுத்த ஆண்டிப்பட்டிக்கோட்டையில் வேளாண்மைதுறை சார்பில் விவசாயிகளுக்கு முன்பருவ பயிர் முகாம் நடைபெற்றது.

மாவட்ட கவுன்சிலர் குருசாமி தலைமை வகித்தார். அரவக்குறிச்சி வட்டார வேளாண்மை உதவி

இயக்குநர் கைலாசபதி வரவேற்றார்.

கரூர் மாவட்ட வேளாண்மை உதவி இயக்குநர் தெய்வேந்திரன் பேசுகையில், நவீன தொழில்நுட்பம் மற்றும் புதிய உத்திகளை பயன்படுத்தி எண்ணெய் வித்துகள் வகையில் நிலக்கடலை, சூரியகாந்தி, ஆமணக்கு பயிர்களையும், பருப்பு வகையில் உளுந்து, பாசிப்பயறு, துவரை உள்ளிட்டவைகளும், தானிய வகையில் சோளம், கம்பு, மக்காச்சோளம் ஆகியவற்றை முன்பருவ பயிர்களாக பயிரிட்டு சாகுபடி செய்து குறைந்த முதலீட்டில் அதிக மகசூல் பெற்று கூடுதல் லாபம் பெறலாம். மேலும் பயிர் செய்யும் பரப்பளவையும் அதிகரிக்கலாம். இதன் காரணமாக நாட்டின் ஒட்டுமொத்த விவசாய பயிர் உற்பத்தி பெருகும். இந்த ஆண்டின் வேளாண் உற்பத்தி இலக்கை எட்டுவதற்கு வாய்ப்பாக அமையும் என்றார்.

இதில் முன்பருவ பயிர்களை பயிர் செய்வது எப்படி, என்னென்ன பயிர்கள் நவீன தொழில்நுட்ப முறையில் சாகுபடி செய்வது போன்ற வேளாண் தொழில்நுட்ப விவரங்களை விவசாயிகளுக்கு மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர்கள் சௌந்தரம், சுப்பிரமணியன், புழுதேரி சரஸ்வதி, வேளாண் அறிவியல் நிலைய ஒருங்கிணைப்பாளர் திரவியம் எடுத்துக் கூறினர். தோட்டக்கலை உதவி இயக்குநர் வளர்மதி நன்றி கூறினார்.

**சின்னதாராபுரத்தில் நாளை உணவு உற்பத்தியை பெருக்க ராபி முன்பருவ முனைப்பு முகாம் விவசாயிகள் பங்கேற்க அழைப்பு**

க.பரமத்தி, : க.பரமத்தி வட்டாரத்தில் வேளாண் துறை சார்பில் உணவு உற்பத்தியை பெருக்க நாளை (6ம் தேதி) நடைபெறும் ராபி முன்பருவ முனைப்பு இயக்க முகாமில் விவசாயிகள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என வேளாண்மை உதவி இயக்குநர் பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

க.பரமத்தி வட்டாரத்தில் உணவு உற்பத்தியை பெருக்க ராபி முன் பருவ முனைப்பு இயக்க முகாம் நாளை (6ம் தேதி) காலை 10 மணிக்கு சின்னதாராபுரத்தில் நடைபெறுகிறது. இதில் வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை, விதைச்சான்று துறை, வேளாண் பொறியியல்துறை, கால் நடை, மீன் வளர்ச்சி துறை, பட்டுவளர்ச்சி துறை, ஈ.ஐ.டி பாரி சர்க்கரை ஆலை, வேளாண் அறிவியல் மையம் மற்றும் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைகழக ஆராய்ச்சி மைய உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு தமிழக அரசின் திட்டங்கள் மற்றும் வேளாண்மையில் நவீன தொழில்நுட்பங்கள் குறித்து விரிவாக எடுத்துரைக்க உள்ளனர். அரசு மற்றும் தனியார் துறைகளின் சார்பில் சிறு

கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வேளாண் இடுபொருட்கள், பண்ணை இயந்திரங்கள், நெல், கரும்பு, துவரை மற்றும் காய்கறி சாகுபடியில் புதிய நாற்று விடும் தொழில்நுட்பங்கள் மற்றும் நடவு முறை செயல்விளக்கங்கள் குறித்து சம்பந்தப்பட்ட அலுவலர்கள் கலந்து கொண்டு விளக்கவுரையாற்ற உள்ளனர். எனவே க.பரமத்தி வட்டார விவசாயிகள் தவறாமல் கலந்து கொண்ட பயனடையலாம்.

இவ்வாறு பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

**அகசிப்பள்ளியில் கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கும் முகாம்**

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி அடுத்த அகசிப்பள்ளியில் நடந்த கால்நடைகளுக்கான மருத்துவ பரிசோதனை மற்றும் குடற்புழு நீக்க முகாமை மாவட்ட ஆட்சியர் துவக்கி வைத்தார்.

கிருஷ்ணகிரி அடுத்த அகசிப்பள்ளியில் தமிழக முதல்வரால் தொடங்கப்பட்ட வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள பெண்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்ற வழங்கப்படும் இலவச கறவை மாடுகள் மற்றும் வெள்ளாடுகள் -செம்மறி ஆடுகளுக்கான இனப்பெருக்க மருத்துவ பரிசோதனை மற்றும் குடற்புழு நீக்க முகாம் நடந்தது. இந்த முகாமை மாவட்ட ஆட்சியர் பூஜாகுல்கர்னி துவக்கி வைத்தார். அப்போது பயனாளிகளிடம் ஆடு, மாடுகளுக்கு கொடுக்கப்படும் தீவன முறை குறித்தும், தடுப்பூசிகள் உரிய காலத்தில் போடப்பட்டுள்ளனவா? காப்பீடு செய்யப்பட்டுள்ள கறவை மாடுகள் மற்றும் ஆடுகளுக்கு அதற்குரிய டோக்கன் மாட்டப்பட்டுள்ளனவா? என்பதையும் சரிபார்த்தார். அத்துடன் கால்நடைகள் முறையாக பாராமரிக்கப்படுகிறதா? என்பதையும் குறிப்பிட்ட காலத்தில் எத்தனை குட்டிகள் ஈன்றுள்ளது என்பதையும் கேட்டறிந்தார்.

பின்னர் அவர் பேசியதாவது: தமிழகத்தில் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள பெண்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்காக ஒரு பயனாளிக்கு 4 வெள்ளாடுகள், செம்மறி ஆடுகளும், தமிழகத்தில் மீண்டும் ஒரு வெண்மைப்புரட்சி உருவாக்கும் வகையில் கறவை மாடுகளும் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 2011-2012ம் ஆண்டிற்கு அக்டோபர் மாதம் வரை 350 கறவை மாடுகளும், 14 ஆயிரத்து 228 ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளன. அவ்வாறு இலவசமாக வழங்கப்பட்ட கறவை மாடுகள் மற்றும் ஆடுகளை நன்கு பராமரிக்க வேண்டும்.

அவ்வாறு வழங்கப்பட்ட கறவை மாடுகளிடம் பால் உற்பத்தியை பெருக்கவும், ஆடுகளின் இனப்பெருக்கம் அதிகரிக்கவும் இனப்பெருக்க பரிசோதனையும், ஆடுகளுக்கு குடற்புழு நீக்க மருத்துவ சிகிச்சையும் அளிக்கப்படுகிறது. இந்த திட்டம் மூலம் பயன்பெற்ற பயனாளிகள்

மட்டுமல்லாமல், அனைத்து விவசாயிகளும் இந்த வாய்ப்பை பயன்படுத்தி கொள்ள வேண்டும். தமிழகத்தில் மீண்டும் ஒரு வெண்மை புரட்சியை உருவாக்க வேண்டும்.

இவ்வாறு ஆட்சியர் பேசினார்.

நிகழ்ச்சியில் கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் டாக்டர் அசோகன், உதவி இயக்குநர் டாக்டர் கந்தசாமி, சிறப்பு அறிஞர் வேடியப்பன், கால்நடை உதவி மருத்துவர் முருகன், கிருஷ்ணகிரி வட்டாட்சியர் மகேஸ்வரன், வட்டார வளர்ச்சி அலுவலர் விஜயன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**கலப்பில்லா விதைகளை பயன்படுத்தினால் உயர் மகசூல் வேளாண் அதிகாரி தகவல்**

நெல்லை, : நெல்லை விதைப்பரிசோதனை அலுவலர் முகம்மது காசீம் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: நெல்லை விதைப்பரிசோதனை ஆய்வகத்தில் விதைகளில் பிறரக விதைகள் கலந்துள்ளனவா என்பதை மைக்ராஸ்கோப் மூலம் கண்காணித்து ரகத்தின் குணநலன்களை கருத்தில் கொண்டு பிரித்தறியப்படுகிறது. உதாரணமாக சான்று நெல் விதையில் பிற ரக விதைகள் அதாவது 2 ஆயிரம் விதைகளுக்கு 4 விதைகள் மட்டும் 0.2 சதவீதம் இருக்கலாம். ஆதார விதைகளில் 2 ஆயிரம் விதைகளுக்கு ஒரு விதை அதாவது 0.05 சதவீதம் மட்டுமே அதிகபட்சமாக இருக்கலாம். வல்லுநர் விதைகளில் ஒரு விதை கூட கலப்பு விதை இருக்கக்கூடாது.

நெல் பயிராக இருந்தால் ஆதார நிலையாக இருந்தால் 0. 00 சதவீதமும், சான்று நிலையாக இருந்தால், 0.02 சதவீதமும் இருக்க வேண்டும். மக்காச்சோளம், தட்டைபயிறு, கொள்ளு, கொண்டைக்கடலை, பட்டாணி, ஆமணக்கு, காரட்,முதலிய பயிர்களுக்கு ஆதார நிலைக்கு 5 கிலோவும் சான்று நிலைக்கு 10 கிலோவும் இருக்க வேண்டும்.

சோளம், துவரை, உளுந்து, பாசிபயிறு, எள், சோயாபீன்ஸ், வெண்டை, கீரை, கொத்தவரை பயிர்களுக்கு ஆதார நிலைக்கு 10 கிலோவும், சான்று விதையாக இருந்தால் 20 கிலோவும் இருக்க வேண்டும்.

எனவே பிற ரக பரிசோதனை மூலம் கலப்பில்லாத விதைகளை பயன்படுத்தி உயர் மகசூல் அடையுடமாறு நெல்லை விதைப் பரிசோதனை அலுவலர் அறிவித்துள்ளார்,

**திருந்திய நெல் சாகுபடி செய்ய பயிற்சி**

நாமக்கல், : நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பம் குறித்த லவச பயிற்சி முகாம் நடைபெறுகிறது.

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் 8ம் தேதி திருந்திய நெல் சாகுபடி

தொழில்நுட்பம் குறித்த இலவச பயிற்சி முகாம் நடைபெறுகிறது. பயிற்சியில், புதிய நெல் ரகம், விதை நேர்த்தி செய்தல், திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பம் உட்பட பல்வேறு பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

இந்த பயிற்சியில் விவசாயிகள் உட்பட அனை த்து தரப்பினரும் பங்கேற்கலாம். பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர், வரும் 7ம் தேதிக்குள் நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் செயல்படும் வேளாண் அறிவியல் நிலையத்தில் தங்களது பெயரை முன்பதிவு செய்து கொள்ள வேண்டும்.

இந்த தகவலை நாமக்கல் வேளாண் அறிவியல் நிலைய அதிகாரிகள் கூறியுள்ளனர்.